ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2403/13 - 2024 සැප්තැම්බර් මස 24 වැනි අඟහරුවාදා - 2024.09.24

*2403/13 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச. அ. இல. : பிஎஸ்/சிஎஸ்ஏ/00/07/17/01.*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியவர்களினால் விடுக்கப்படும் பிரகடனம்**

(முத்திரை)

**அநுர குமார திசாநாயக்க**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 70 ஆம் உறுப்புரையினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமையவும், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 10 இன் ஏற்பாடுகளுக்கமையவும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி, அநுர குமார திசாநாயக்க ஆகிய நான் -

(அ) இன்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் பாராளுமன்றத்தை கலைப்பதோடு, புதிய பாராளுமன்றத்தை இரண்டாயிரத்து இருபத்துநான்காம் ஆண்டு நவம்பர் மாதம் இருபத்தோராம் திகதி கூடுமாறு அழைக்கிறேன் என்றும்;

(ஆ) இரண்டாயிரத்து இருபத்துநான்காம் ஆண்டு நவம்பர் மாதம் பதிநான்காம் திகதியை பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான திகதியாக நிர்ணயிக்கின்றேன் என்றும்;

(இ) இரண்டாயிரத்து இருபத்துநான்காம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நான்காம் திகதி தொடங்கி இரண்டாயிரத்து இருபத்துநான்காம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பதினோராம் திகதி நண்பகல் பன்னிரெண்டு மணிக்கு முடிவுறும் காலப்பகுதியை தெரிவு அத்தாட்சி அதிகாரிகளினால் வேட்புமனு பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் வேட்புமனு பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய காலப்பகுதியாக குறித்துரைக்கிறேன் என்றும்; அத்துடன்

1A - G 42737 — 359 (2024/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஈ) இதற்கான அட்டவணையின் பந்தி II இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்தையும் அவ்வட்டவணையின் பந்தி I இல் அதற்கு எதிராகவுள்ள குறிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்தில் தெரிவு செய்யப்படுவதை நாடிநிற்கும் வேட்பாளர்களுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட வேண்டிய இடமாகக் குறித்துரைக்கின்றேன் என்றும் இத்தால் சகலரும் அறிக.

இரண்டாயிரத்து இருபத்துநான்காம் ஆண்டு செத்தெம்பர் மாதம் இருபத்துநான்காம் திகதியாகிய இன்று கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

கௌரவ சனாதிபதியவர்களின் ஆணைப்படி,

கலாநிதி **என். எஸ். குமாநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

**அட்டவணை**

| *பந்தி I* | *பந்தி II* |
|---|---|
| *தேர்தல் மாவட்டம்* | *வேட்புமனு தாக்கல் செய்யுமிடம்* |
| இல. 01 – கொழும்பு | மாவட்டச் செயலகம், கொழும்பு |
| இல. 02 – கம்பஹா | மாவட்டச் செயலகம், கம்பஹா |
| இல. 03 – களுத்துறை | மாவட்டச் செயலகம், களுத்துறை |
| இல. 04 – கண்டி | மாவட்டச் செயலகம், கண்டி |
| இல. 05 – மாத்தளை | மாவட்டச் செயலகம், மாத்தளை |
| இல. 06 – நுவரெலியா | மாவட்டச் செயலகம், நுவரெலியா |
| இல. 07 – காலி | மாவட்டச் செயலகம், காலி |
| இல. 08 – மாத்தறை | மாவட்டச் செயலகம், மாத்தறை |
| இல. 09 – அம்பாந்தோட்டை | மாவட்டச் செயலகம், அம்பாந்தோட்டை |
| இல. 10 – யாழ்ப்பாணம் | மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் |
| இல. 11 – வன்னி | மாவட்டச் செயலகம், வவுனியா |
| இல. 12 – மட்டக்களப்பு | மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு |
| இல. 13 – திகாமடுல்ல | மாவட்டச் செயலகம், அம்பாறை |
| இல. 14 – திருகோணமலை | மாவட்டச் செயலகம், திருகோணமலை |
| இல. 15 – குருணாகல் | மாவட்டச் செயலகம், குருணாகல் |
| இல. 16 – புத்தளம் | மாவட்டச் செயலகம், புத்தளம் |
| இல. 17 – அனுராதபுரம் | மாவட்டச் செயலகம், அனுராதபுரம் |
| இல. 18 – பொலன்னறுவை | மாவட்டச் செயலகம், பொலன்னறுவை |
| இல. 19 – பதுளை | மாவட்டச் செயலகம், பதுளை |
| இல. 20 – மொனராகலை | மாவட்டச் செயலகம், மொனராகலை |
| இல. 21 - இரத்தினபுரி | மாவட்டச் செயலகம், இரத்தினபுரி |
| இல. 22 – கேகாலை | மாவட்டச் செயலகம், கேகாலை |

EOG 09-0161

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.